214

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

கிளை : குருகுலம், மாம்பாக்கம்; செய. மார்கழி, ௯ 24—12—54 தளிர்—12

OFFICE 11 JAN 1955

## திருவள்ளுவர் அருள் மொழிகள்

கடவுள்:

9. தலைமை, அறிவு, அன்பு, விருப்பு வெறுப்பு இலலாமை, உண்மை, ஐம்பொறி அடக்கம், முழு முதன்மை, அறத்திறன் என்னும் மதிக்கத்தக்க சிறப்பியல்புகளில், மக்கள், வளர்ச்சி பெறவேண்டும்; இவற்றை இயல்பாகவே உடையவன் இறைவன்; அவன் வழிபாட்டினுல் மக்களுக்கு இத் தன்மைகள் பெருகி வரும். ஐம்பொறிகளும் மனமும் மக்களுக்குத் தலையில் உள்ளன. தலையால் இறைவனை வணங்குதல் என்றால் இந்த ஆறு கருவிகளும் இறைவனிடத்தில் ஈடுபடுகின்றன என்பது கருத்து. தலையால் வணங்கிப் பொறிகளும் மனமும் இறைவனிடம் ஈடுபாடு கொள்ளாவிட்டால், ஐம்பொறிகளையும் மனத்தையுங் கொண்டு பிறப்பெடுத்து வந்ததனுல் ஒரு பயனும் இல்லை; பொறிகளைப் பெற்றும் பொறிகளாற் பயன் கொள்ளாததுபோல் ஆகிவிடும்; குருட்டுக் கண், செவிட்டுக் காது முதலியவை இருந்தும் எப்படி பயனில்லையோ, அதுபோல இறைவனை வணங்காத தலையிருந்தும் குணமில்லை என்றுதான் கூறவேண்டும்.

10. பிறப்பெடுத்து வந்த மக்கள், பிறப்பினுல் உண்டாகும் துன்பங்களை எப்படியுங் கடந்தே தீரவேண்டும்; அதற்குமேல், துன்பச் சுமையாயுள்ள இப் பிறவியே உண்டாகாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்; பிறப்புறப்புகளில் உழலாத முழு முதற்கடவுள் உதவி ஒன்றினுலேதான் அது முடியும்; ஆதலால் அத்தகைய இறைவனடியை சார்ந்தவர்க்கல்லாமல், மற்றவர்க்குப் பிறவிப் பெருங்கடல் நீந்துதல் இல்லை; மக்கள் தம்மைப்போல் பிறப்பிறப்புகளில் உழலும் எனை மக்கள் உதவியால் அப் பெரிய நிலைமையை அடைய முடியாது.

மழை:

11. மழை பொழிந்து உலகம் நடைபெற்று வருகின்றது; இதனுல், உலகத்தை நிலைப்பிக்கும் வல்லமை மழையில் இருக்கிறதென்று தெரிகிறது; அப்படியானுல், மழை என்பது அமிழ்தத் தன்மை வாய்ந்தது என்றும் இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அழியாமல் நிலைநிறுத்தும் வல்லமை அமிழ்தத்துக்கு உண்டு.

12. மழைநீர் உலகுக்கு உணவுப் பொருள்களை விளைத்துத் தருகிறது; தானே குடிநீராகவும் பயன்படுகிறது; இப்படி உண்ணும், உணவு பருகும் நீர் என்று இருவகையமிழ்தமாக மழைநீர் உதவுகிறது; அதைப்போல் உதவுவது வேறென்று இல்லை.

13. வாழ்க்கைக்கு மழை முதன்மையானது; மழை பெய்யாமல் தவறிவிடுமானுல் உலகத்தில் எல்லா உயிர்களும் பசியால் வருந்தும்; நீர்வேட்கையாலும் வருந்தும்; அப்புறம், உலகத்தில் வேறென்ன காரியம் செய்ய முடியும்?

14. மழை பெய்யத் தவறினுல் உழவர்கள் உழமாட்டார்கள்; உழவு மறைந்தால் மற்றத் தொழில்களும் நின்றுவிடும்; உணவும், நீரும் இல்லாமல் யார் எந்த வேலையைத்தான் செய்ய முடியும்? மழை வருவாய் இருந்தால் தானே மற்ற வருவாய்களுக்கு வழி பிறக்கும்.

15. பெய்யாமல் உலகத்தைக் கெடுப்பதும் பெய்து உலகத்தை வளர்ப்பதும் இரண்டும் மழையின் கையில் இருக்கின்றன. உலகக் கேடும், உலக வளர்ச்சியும், மழையால் இருக்கின்றன என்பது இதனுல் நன்ருய்த் தெரிகிறது. மழையின் ஆற்றலுக்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | செய, மார்கழி, | தளிர் |
|---|---|---|
| 7 | 24-12-54 வெள்ளி. | 12 |


## குறிப்பு

மெய்ஞ் ஞானியராம் அருணகிரிப் பெருந்தகை மதுராந்தகம் என்னும் தலத்தில் வழிபட்டுப் பாடியருளிய திருப்புகழ்ப் பாக்களில் "மதுராந்தகத்து வட திருச்சிற்றம்பலத்தமர்ந்த பெருமாளே" என முருகவேளை வாழ்த்தி வணங்கினர். அவர் அங்ஙனம் பாடிய முருகவேளின் திருவுருவம் மதுராந்தகத்துக்கு அருகில் எங்குளது என்று ஆய்ந்ததில், இடம் இதுகாறும் புலப்படாதிருந்தது.

இக்குறையைச் சிந்தனை செய்தனர், மாம்பாக்கம் குருகுல ஆசிரியர் சித்தாந்தச் செஞ்ஞாயிறு, சிவநெறிச் செஞ்சொற் கொண்டல் திரு. இளஅழகனர். ஆண்டவனுடைய அருட்டோற்றம் இல்லாது என் செய்வது எனச் சிந்தித்து அவனையே வேண்டி நின்றனர். "இப்போது திருமுருகன் திருவருளால் ஆசுகவிபாடி, அவரை நித்தம் தமது அருள்வாக்கால் மகிழ்விக்கும் திருவாளர் அருட்கவி. சேதுராமன் உளரே, அவர் மூலம் இடம் புலப்படுமா" என எண்ணி 20-12-1954, 292 லிங்க செட்டித் தெருவிலுள்ள திருத்தணிகேசர் சந்நிதியில் அருட்கவி யவர்களைக் கண்டு வடதிருச்சிற்றம்பலத்தில் நடராஜப் பெருமானையும் அங்குக் குருபழநி மலைமேல் தண்டாயுதபாணியையும் ஸ்தாபித்து வழிபட ஆசை கொண்டுள்ளேன்; ஆண்டவன் சம்மதத்தை அறிய விரும்புகிறேன்" எனத் தெரிவிக்க, அருட்கவி அவர்கள் திருத்தணிகேசர் சந்நிதியில் நின்று பரவ, அப்போது உதித்த பாடல்களாகும் இந்நூலிலுள்ள அருட் பாக்கள்.

அப்பாடல்களை உற்றுநோக்குபவர்களுக்குத் திரு. இளஅழகனரின் முயற்சியாம் திருப்பணிக்கு முருகவேளின் பூரண சம்மதம் உளது என்பது வெள்ளிடைமலைபோல விளங்கும்.

திருப்புகழ்ச் சந்தத்திலுள்ள முதற் பாட்டில் விநாயகர் முதற் கண் வந்துளதே அதுவே சிறந்த மங்கலக் குறியாம். முருகன் குருமூர்த்தி என்பதற் கேற்ப, [illegible] உபதேசம் செய்த சிவபிரான், அகத்தியர், அருணகிரிநாதர் மூவரும் இப் பாடலில் வருவதும், 'குருபழநி' என்னும் பேருக்கு மிகப் பொருத்தமாக அது அமைந்துள்ளதும் ஆண்டவன் திருவருளே!

"வேலா சரணம் சரணமென்
மேல்வெகு ளாமலினி
மேலா யினுங்கடைக் கண்பார்
பருப்பத வேந்தன்மகள்
பாலா! குறமுனி யார்க்கும்
திருப்புகழ் பண்ணவர்க்கும்
ஆலாலம் உண்டவர்க் கும்உப
தேசித்த ஆண்டவனே"

என வரும் 'முருகாந்தாதி' இங்கு நினைவுக்கு வரும்.

'குரு பழநி' என்பது தென்பழநிக்கும் வடபழநிக்கும் இடைப் பழநியாய் விளங்குகின்றது என்பதும், வடதிருச்சிற்றம்பலத்தில் கூத்தப்பிரான் திருக்கோலம் உளது என்பதும், குருபழநியில், "முருகா! நீ வந்து குடியிருக்க வேண்டும்" என்னும் வேண்டுகோளும், அடியார்களுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் இப் பாடல்களில் அமைந்துள்ளன.

"யார்க்கும் முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ!"

வ. சு. செங்கல்வராய பிள்ளை.
சென்னை 20-12-1954.


Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE
MERCHANTS

AVINASHI ROAD,
COIMBATORE.

உ

## குருபழநித் திருப்புகழ்

ராகம்:—ஹரிகாம்போதி. தாளம்:—ஜம்பை.

1\. கடகளிறு முகனிளைய!
அருணகிரி பரவிமகிழ்
கலபமயில் உலவிவரு கழல்வீரா!

கருணையுரு வெனுமுதல்வ!
குறுமுனிசொல் அறமுகவ!
கழகமிடை தமிழலசி அருள்வேளே!

விடமருவு [1]களவிமலர்,
படஅரவு புனைசடிலர்,
மிடறுகமழ் கெனவுடைய சிவையாள்தன்—

மிருகணவர், விடையரொரு
சடையர் தருபுதல்வ! இரு
வினைமடிய எனையடிமை கொளவேணும்;

மடவரலி சிறுவிரலி
மருமருவு மலர்குழலி
வடிவுடைய மறவர்மகள் அடிபேணி—

[2]மதனகிரி யதனின்மிசை
இனிதுவளர் புனித! இள
மழவிடையின் நடையுடைய அரசேறே!

குடமுழவு முதல்முழவ
நடனமிடு திருவிழவு
குலவும்அருள் நிலவுமதி விதலீலா—

[3]குலதடினி தழுவியணை
குருகுமர! திருமுருக!
குருபழநி மருவிமகிழ் பெருமாளே!

### கட்டளைக் கலித்துறைகள்

ராகம்:—தோடி.

2\. தென்பழ நிக்கும் வடபழ நிக்கும் இடைப்பழநி
யென்பழ நிப்பதி என்பழ நிப்பதி யென்பவர்சூழ்
[4]கொன்பழ கிக்கிரி யாமொரு ஞான குருபழநி
நன்பழ நிப்பதி நாயகனேயுள் நயந்தருளே.

---

1\. களம்-கழுத்து.
2\. மதனகிரி-திருத்தணிகை.
3\. குலதடினி=கங்கை; தடினி-ஆறு.
4\. கொன்-பெருமை;வலிமை.

## பத்ரிநாத் யாத்திரை

1953-ம் ஆண்டு ஜூன் 18-ம் தேதி சென்னைசென்டிரல் ஸ்டேஷனில் பாரத்டிராவல் சர்வீஸ் கம்பெனியாரின் உதவியால் பத்ரிநாத் யாத்திரைக்குப் புறப்பட்டோம். யாத்திரைக்குப் புறப்பட்ட நாங்கள் 20 பேர்.

நாங்கள் பார்த்த முக்கிய தலங்களும் நகரமும் அனைத்தையும் கூறினால் நீண்டுகொண்டே போகும். ஆதலால் முக்கியமானவற்றை எழுதியுள்ளோம்.

பண்டரிபுரம்:

வண்டி ராய்ச்சூர் வழியாகக் குருதுவாடி ஜங்ஷனை அடைந்ததும் அங்கிருந்து கிளை மார்க்கமாகப் பண்டரிபுரத்தை அடையலாம்.

அகல்யாபாய் தருமசாலை, அதுபோன்ற இன்னும் அநேக தருமசாலைகள் உள்ளன. பண்டாக்களின் ஆட்கள், வேண்டிய வசதியைச் செய்து தருகிறார்கள். அங்கு மகாராட்டிர பாஷை பேசப்படுகிறது. சந்திரபாகா என்னும் பீமா நதி அங்குள்ளது. அதில் மூழ்குவது விசேடம்.

பண்டரிநாதர் ஆலயம் மிகப் பெரியதாக உள்ளது. செந்தூர நிறமுள்ள பற்பல விநாயகர்களை அங்குக் காணலாம். ஆலயத்துக் கருகில் உருக்குமணி தேவி ஆலயம் உள்ளது. பண்டரி நாதர் பிராகாரம் வரும்போது நிருதி மூலையில் சங்கரர் ஆலயம் உள்ளது. வடக்குப் பிராகாரத்தில் விசுவநாதர் என்னும் பெயரொடும் விசாலாட்சி என்னும் பெயரொடும் சுவாமி அம்மன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அருகில் உள்ள கோபாலபுரத்தில் சக்குபாய் கோயில் உள்ளது.

பூனா:

குருதுவாடி ஜங்ஷனிலிருந்து பூனா ஜங்ஷனுக்கு 115 மைல். பூனாவில் மதராஸ் தருமசாலையும் இருக்கிறது.

இந்த நகரத்தின் மேற்கே பார்வதி குன்று உள்ளது. இதில் கார்த்திகேய சுவாமி என்னும் சுப்பிரமணியருக்கும், பரமேஸ்வருக்கும், விஷ்ணுவுக்கும் தனித் தனி ஆலயங்கள் இருக்கின்றன. பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்த குகை ஒன்று உள்ளது. இங்குள்ள காய் கறி மார்க்கட் பார்க்கத் தக்கது. பூனாவில் இராணுவ தளம் உள்ளது.

பம்பாய்:

பம்பாய் ஸ்டேஷனில் பதினைந்து பிளேட் பாரங்களுக்கு மேல் இருக்கின்றன. இங்கு நம் நாட்டிற்கு வேண்டிய ஆகாரங்கள் மதருஸ் ஓட்டலில்தான் கிடைக்கும்.

மகா இலட்சுமி கோயிலில் தங்க விக்கிரகம் உள்ளது. மதில்கள் வெள்ளித் தகடுகளால் ஆனவை.

இன்னும் பார்க்கவேண்டியவை: நேரு பார்க், விக்டோரியா கார்டன், துறைமுகம், போர்ட், மிண்ட், டவுன் ஹால், மியூசியம், சௌபாத்பீச், பாபுல் நாதர் கோயில், இந்தியா கேட், எலக்டிரிக் ஹவுஸ், ஜாவிர் பஜார் முதலியன.

நாஸிக் பஞ்சவடி:

பம்பாயிலிருந்து வண்டி நாஸிக் பஞ்சவடிக்கு வரும் பொழுது பதினொரு குகைகளைத் தாண்டி வரவேண்டும்.

இங்கு, கோதாவரி நதி ஓடுகிறது. நதியில் இராம குண்டம், சீதா குண்டம், அனுமார் குண்டம் என்கிற குண்டங்கள் இருக்கின்றன. கபாலீஸ்வரர் ஆலயம் இங்குப் பிரசித்தி பெற்றது. காளிகோவில் ஒன்றும் உள்ளது. தபோவனம் இருக்கிறது. சூர்ப்பனகை பங்கம் அங்கு நடந்ததாகக் கூறப்படுகிறது.

ஹோஷங்காபாத்:

இங்கு நர்மதா நதியில் ஸ்நானம்; ஆமைகள் விசேடம்; கரையில் அம்மன் சந்நிதி உண்டு

போபால்:

இங்கு மசூதியும் சிறிய கோட்டை ஒன்றும் இருக்கின்றன. அக் கோட்டையில் ஆஸ்பத்திரி வைத்திருக்கிறார்கள்.

போபால் இராஜாவின் கோட்டையும் இருக்கிறது.

ஆக்ரா:

உலக அதிசயப் பொருள்களில் ஒன்றான தாஜ்மகால் இங்குதான் இருக்கிறது. இது சலவைக் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. இதை அவசியம் அனைவரும் பார்க்கவேண்டும். தயாள்பாத் என்பது ஒரு சேவாஸ்ரமம். குருகுலம் தியான மண்டபம் ஆகிய இவைகள் வேலை நடந்து வருகின்றன. வெள்ளைக் கற்களால் அழகாகக் கட்டுகின்றனர். யமுனை நதி இதன் வழியாகச் செல்கிறது.

மதுரா:

யமுனை நதி இதன் வழியாகச் செல்கிறது. நதிக் கரையில் விஷ்ணு கோயில் அமைந்துள்ளது. பிருந்தாவனம் செல்லும் வழியில் பிர்லாவினால் கட்டப்பட்ட பிர்லா மந்திர் என்ற கட்டடம் மிகவும் அழகாக இருக்கின்றது.

பிருந்தாவனத்தில் உள்ள மூர்த்திகள் தமிழ் நாட்டில்

ராகம்:-ஸஹானா

3. மதுராந் தகத்து வட்திருச் சிற்றம் பலத்தமர்ந்த
[1]சதுராந் தகற்கும் குதுராந் தகற்கும் தனிப்பகையாய்
[2]மதுராந் தகற்கும் வரமருள் மாட்சியன் [3]மாப்பிள்ளையே!
[4]விதுராந் தகர்க்கும் அரிமாப் பிள்ளையே! [5]வை வேலவனே.

ராகம்:-வசந்தா.

4. வம்பலர் சூடிடும் அம்புலி வேணி வடதிருச்சிற்
றம்பல வாணர் அடியார்க் கருளும் அருட்டிறத்தார்
அம்பல மாடிய ஆண்டகை யானவர், தென்திருச்சிற்
றம்பல வாணர் [6]மதுராந் தகனார் அருள் மகவே!

ராகம்:-அடாணா.

5. ஒருபழ நிக்கிரி ஓங்கி யுயர்ந்தா வினன்குடியாய்
வருபழ நிக்கிரி வானவர் போற்றும் வடபழநி
இருபழ நிக்கும் இடைப்பட் டிலங்கும் எழிற்பழநி
குருபழ நிக்குட் குடியிருப் பாயெங்கள்கோமகனே!

1. சதுராந்தகன்-யமன்; குதுராந்தகன்-அந்தகாசுரன்.
2. மதுராந்தக சோழன்.
3. சிறந்த பிள்ளையே!
4. விதுராந்தகன்-துரியோதனன்; துரியோதனனுக்கு அரி-கண்ணபிரான்; திருமால்
5. வை-கூர்மை.
6. மதுராந்தகனார்-மதுராந்தகத்தில் வீற்றிருக்கும் சிவபிரான்.

உள்ளவை போன்றே இருக்கின்றன. பன்னிரு ஆழ்வார்களும் அங்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றனர். கிருஷ்ண பகவான் நடனம் செய்த காளிங்க மேடும் உள்ளது. இதன் அருகாமையில் உள்ள கோகுலமும், கோவர்த்தனமும் பார்க்கலாம்.

டில்லி:

டில்லியின் வழியாகச் செல்லும் நதி யமுனை. இதன் குறுக்கே செல்லும் பாலம், ஆக்ராவில் உள்ளதுபோலவே மேற்பகுதியில் இரயில் போகவும் இடையில் மனிதர், கால்நடை, வண்டி முதலியன செல்லவும் கீழ் வழியாகத் தண்ணீர் ஓடவும் வசதியாக அமைந்துள்ளது. இங்கிருந்து பன்னிரண்டு மைல் தூரத்தில் குதுப்மினர் என்னும் ஸ்தூபி உள்ளது.

நியூ டில்லி:— இங்கு அகன்ற வீதிகளும் நெருங்கிய மின்சார விளக்குகளும் சிங்காரத் தோட்டங்களும் அழகாக அமைந்திருக்கின்றன.

செங்கோட்டை, ஜும்மா மசூதி, காந்தி சமாதி, பிர்லா மாளிகை, சட்டசபை, ராஷ்ட்ரபதி மாளிகை முதலியன பார்க்கத் தக்கன.

ஹரித்துவாரம்:

கங்கா நதி இதன் வழியாகச் செல்கின்றது. இந்த நதியில் ஸ்நானம் செய்தல் வேண்டும். பிரம குண்டம், அதனது ஆலயம், பீமகோடா எனும் ஆலயம், கனகல் என்னும் இடத்தில் தக்ஷன் யாகம் செய்த இடம், அங்குள்ள ஆலயம், மயா தேவி என்னும் ஆலயம், அணைக்கட்டு முதலியன அங்கும் பார்க்க வேண்டியவை.

ரிக்ஷிகேசம்:

கங்கா நதி இங்கேயும் செல்கிறது. இங்கும் பல தரும சாலைகள் உள்ளன. இதன் தீர்த்தக் கட்டிடத்திற்கு அருகில் சிறு ஆலயம் ஒன்றும், மற்றும் இலட்சுமண சூலாவில் இலட்சுமணர் ஆலயம் ஒன்றும் இருக்கின்றன. சொர்க்காஸ்ரமம் செல்லக் கங்கையைக் கடக்கவேண்டும். இங்கிருந்து கால் நடையாகப் பத்ரி நாராயணம் செல்லலாம்.

பத்திரிநாராயணம்:

பனி மலைகளுக்கு ஏறிச் செல்ல என்ன ஏற்பாட்டுடன் செல்லவேண்டுமோ அந்த ஏற்பாட்டுடன் இதற்கும் செல்ல வேண்டும்.

லக்னௌ (லக்ஷ்மணபுரி)

இங்கு மிருகக் காட்சிச் சாலை உண்டு. தில்குஸ் கார்டன் அழகாக அமைந்துள்ளது. இங்குப் பாயும் நதி கோமதி. அஸதுல்லா கோட்டை ஒன்று உள்ளது. இக் கோட்டையினுள் செல்வோர் திரும்பி வரக் கொஞ்சம் தடுமாற வேண்டி யிருக்கும். இது கட்டிய அரசன் தன் ஆசை நாயகிகளுக்கென அமைக்கப்பட்ட பல கட்டிடங்கள் மிகவும் அழகுறக் காட்சி அளிக்கின்றன.

ஒவ்வொரு கட்டிடமும் இரு நிலைக் கண்ணாடிகளைக் கொண்டு விளங்குகின்றன.

அயோத்தி:

அயோத்தி, சப்த புரிகளுள் ஒன்று; தசரதச் சக்ரவர்த்தி ஆண்டது; பல தரும சாலைகள் உள்ளன; இங்கு, சரயுநதி ஓடுகின்றது; இந்த நதியின் கரையில் பல ஆலயங்கள் இருக்கின்றன. அரண்மனையில் ஆலயம் ஒன்று இருக்கிறது.

இராமர் ஜன்ம ஸ்தானம், ஆஞ்சநேயர் கோயில், இரத்தின சிம்மாசனம், கனக பவனம், தமிழ் நாட்டில் உள்ள கோவில் போல் கட்டப்பட்டிருக்கும் அம்மாஞ்சி கோவில் இவைகள் முக்கியமாகப் பார்க்கத் தக்கன. கணேச ஸ்தானம் முக்கிய சிவ தலமாகும்.

நந்திக்கிராமம் அயோத்திக்குக் கிழக்கே இருபது மைலில் இருக்கிறது. விஷ்ணு தலமும், இராமர், சீதை, லக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர் ஆகியோரின் திரு உருவங்களும் இருக்கின்றன. இது பரதர் பாதுகா பட்டாபிஷேகம் செய்து பூஜித்த தலமாகும்.

பிரயாகை:

அலகாபாத் ஜங்ஷனுக்கு முன்னதாகப் பிரயாகா என்னும் ஸ்டேஷன் இருக்கிறது. கங்கை, யமுனை, சாஸ்வதி என்னும் மூன்று நதிகளும் சங்கமமாகின்றன. இது, திருவேணி சங்கமம் என்று சொல்லப்படும்; இங்குத் தோணி ஏறி, யமுனையைக் கடந்து அக் கரைக்குப் போனால், சோமேஸ்வரம் என்ற ஆலயம் இருக்கிறது. வரும் வழியில் ஒரு பெரிய பள்ளத்தாக்கில் மிகப் பெரிய வடிவமாய் அனுமார் ஒன்று படுத்திருப்பது போல் காணப்படும். இராமனால் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கம் ஒன்று இருக்கிறது.

அலகாபாத்:— அலகாபாத் என்னும் நகரம் பிரயாகைக்கு அருகில் இருக்கிறது. அங்குள்ள மியூசியம், ஐக்கோர்ட், பண்டித மோதிலால் நேருவின் ஆனந்த பவன், காங்கிரஸ் பவன் முதலியன இருக்கின்றன.

ஸ்ரீ காசி:

காசி சிறந்த புண்ணிய தலம். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றனும் மேன்மை பெற்றது. விசுவநாதர் கோயில் தான் இத்தலச் சிறப்புக்குக் காரணம், இங்கும் கங்கை நதிதான் பாய்கிறது. காசியில் அறுபத்து நான்கு தீர்த்தக் கட்டங்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை ஐந்தாகும். கங்கையில் மணிகர்ணிகா கட்டம் மிக விசேடமுடையது. முக்கிய ஐந்தின் பெயர்கள்:–

(1) அதிசங்கம கட்டம் (2) சதாஸ்வமேத கட்டம் (3)வருணு சங்கம கட்டம் (4) பஞ்ச கங்கா கட்டம் (5) மணிகர்ணிகா கட்டம். இதைப் பஞ்ச தீர்த்த யாத்திரை என்றும் சொல்வார்கள்.

நித்திய யாத்திரை என்பது (1) விசுவேசம் (2) மாதவம் (3) துண்டி (4) தண்டபாணி (5)பைரவம் (6) வந்தே காசி (7) குகா(8) கங்கா (9) பவானி (10) மணிகர்ணிகை என்னும் பத்து இடங்களிலும் தீர்த்தம் ஆடுதலும் தரிசனம் செய்தலும்.

தக்ஷிண யாத்திரையில் கேதார கட்டம் சென்று அருகில் உள்ள கௌரி குண்டத்தில் ஸ்நானம் செய்து கேதாரீஸ்வரரைத் தரிசனம் செய்தல் வேண்டும். மேலும் சிந்தாமணி விநாயகர், துர்க்கா தேவி, அனுமார், கௌடியம்மன், சங்கட விமோசனம் இவைகளைத் தரிசித்தல் வேண்டும்.

சிறப்பாக, விசுவநாத சுவாமி அன்ன பூரணி தேவி, விசாலாட்சி தேவி, துண்டி விநாயகர், ஞானவல்லி ஆகிய இவர்களைத் தரிசித்தல் வேண்டும்.

வியாச காசி:– இது கங்கையின் மறு கரையில் உள்ளது; இதைத் தரிசித்தால்தான் காசிக்கு வந்த புண்ணியம் கிட்டும்.

காசியில் உள்ள சர்வகலா சாலை மிகப் பெரியதாகவும் அழகாகவும் இருக்கின்றது. அசோக ராஜ்யத்தின் சின்னங்கள் அடங்கிய காட்சிச் சாலை ஒன்றும் இருக்கின்றது.

கயா:

கயாவும் காசியைப் போலவே சிறப்புற்ற தலமாகும். பல தருமசாலைகள் உள்ளன. நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரமும் உண்டு, கயாவில் பல்குனி நதி ஓடுகிறது.

அக்ஷய வடத்தில் பிண்டம் போடுவது வழக்கம். விஷ்ணு பாதம் என்னும் ஆலயம் ஒன்றும் இருக்கிறது. இதில் பெரிய கல்லில் விஷ்ணு பாதம் தெரிகிறது. சீதா குண்டம்: இது பல்குனி நதியின் கீழ்க் கரையில் உள்ளது.

கல்கத்தா:

ஹௌரா என்பது ஸ்டேஷன் பெயர். விக்டோரியா மெமோரியல் என்ற பெயரோடு சலவைக் கற்களால் கட்டப்பட்ட கட்டிடம், அழகாகவும் காண்பவர் மனதைக் கவரத் தக்கதாகவும் இருக்கிறது. நியூகார்டன், சுவாலஜிகல் கார்டன் ஆகிய இரண்டும் காண்பதற்கு அழகாக இருக்கின்றன. இராம கிருஷ்ண பரம ஹம்சர் இருந்த இடமும் பூசித்த இடமும் இங்குப் பார்க்கலாம்.

புவனேஸ்வரம்:

புவனேஸ்வரர் கோயில், கபிலேசுரர் கோயில், பல ரிஷிகள் தவம் செய்த இடம், பரசுராமர் கோயில் ஆகிய இவைகள் காணத் தகுந்தவை.

பூரி (ஜகந்நாதம்):

இங்குப் பேசப்படும் மொழி ஒரியா. அனைவருக்கும் இந்தி தெரியும். மார்க்கண்டம் என்னும் தீர்த்தத்தில் மூழ்குதலும் மகோததி என்றும் சமுத்திரத்தில் மூழ்குதலும் விசேடம். இங்குள்ள ஆலயம் ஜகந்நாதேஸ்வரர் ஆலயமாகும்.

வால்டேர் (சிம்மாசலம்)

இங்குள்ள ஆலயத்திற்கு, சுமார் ஒரு மைல் மலைமீது ஏற வேண்டும். மலையின் மீதுள்ள சுவாமிக்கு வராக நரசிம்ம மூர்த்தி என்று பெயர். அதன் அருகில் சிவாலயமும் உண்டு.

இராஜமகேந்திரம்:

இராஜமகேந்திரத்தில் தரும சாலைகள் உள்ளன. இங்குப் பாயும் நதி கோதாவரி. இதன் குறுக்கே 56 கண்கள் உள்ள பாலம் போடப்பட்டிருக்கிறது. இங்குள்ள ஆலயம் கோடி லிங்கேஸ்வரர் ஆலயமாகும்.

முறையே இவையெல்லாம் தரிசித்துக் கொண்டு திருவருளுதவியால் ஆகஸ்டு மாதம் 14–தேதி நலமாகச் சென்னை வந்தோம்.

குருகுல அன்பர்கள் பலர் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்து எல்லார்க்கும் மாலையிட்டு வரவேற்ற காட்சி உருக்கமாய் இருந்தது.

திரும்பிவந்த வாரத்தில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பிலும், சென்னையிலும் மாம்பாக்கத்திலும் குருகுலச் சார்பிலும் வரவேற்புக் கூட்டங்கள் நடந்தன; அன்பர்கள் பாராட்டுரைகள் வழங்கி மகிழ்ந்தனர்; நாங்கள் பெரிதும் நன்றி யுடையோம்.

ஜெயலக்ஷ்மி,
(குருகுல மாணவி)
யாத்திரை உறுப்பினர்.

# ஸ்ரீ விசாலாக்ஷி அம்மையார்

சன்மார்க்கத் தவச்சாலை; வடலூர்

**(நிறுவியது 1938)**

அம்மையாரின் பிறப்பு: 1901-க்குச் சரியான பிலப வருடம் ஆடி மாதம் 11தேதி. பிறப்பிடம்: திரிகோணமலை; பெற்றோர்கள்: சீதா சிவபெருமான்; குலம்: வேளாளர் மதம்: இந்து மதம் படிப்பு- தமிழும் ஆங்கிலமும்(10-வது) திருமணம்: 17-ம் வயதில் நடைபெற்றது.

கணவரிடம் இவர்கள் நோக்கத்தை நிறைவேற்ற விநாயகர் பூஜையும் அடியார்கள் பூஜையும் மௌனத் தியானமும் நடத்தினார்கள்; பின்னர் 1930-ல் கதிர்காமத்திற்கும் சிவனொளிபாதம் முதலிய க்ஷேத்திரங்களுக்கும் கால்நடையாகவே திருக்கூட்டத்துடன் யாத்திரை செய்து ஞானம் பெற்றவர்.

1933-ல் இந்தியாவிற்குத் தாயாருடன் வந்து சிதம்பரம், விருத்தாசலம், சென்னை திரு, வொற்றியூர் முதலிய க்ஷேத்திரங்களுக்கும் மற்றும் திருவண்ணாமலைக்கும் கால் நடையாகவே சென்று அருளைப் பெற்றவர்கள். திருவொற்றியூரில் 15 நாட்கள் கரபாத்திர பிச்சையேற்று அருந்தினார்கள். பின்பு 14 வருடம் கடுமையான உண்ணாவிரதம் மௌன தவ விரதம் அனுஷ்டித்து வந்தார்கள்.

1934-ல் விருத்தாசலத்தில் கடுமையான குகைவாசம் செய்தார். 1938-ல் தாயாருடன் வடலூர் சத்திய ஞான சபைக்கு வந்து அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அருள் பெற ஓர் சத்திரத்தில் தங்கினார்கள். அம்மையாரின் அற்புதச் செயலைக் கண்ணுற்ற பல மாதர்களும் அன்பர்களும் உதவிபுரிந்து வந்தார்கள். பின்பு பல மாதர்களின் உதவியினாலும் பொருள் சகாயத்தாலும் சத்தியஞான சபையின் மேற்கில் ஓர் இடம் பெற்று குகை ஸ்தாபிதம் செய்து 1939ல் மாதர் சங்கம் ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். அதில் தங்கித் தவம் செய்துவருங் காலத்தில் அம்மையார் மாதர்களிடத்தில் கூறியதாவது: நமது ஸ்தாபிதத்திற்குக் கள்வராலும் தீயினாலும் தீங்குண்டாகுமெனக் கூறினார்கள். அவ்வண்ணமே குறுகிய நாளில் மூன்று திருடர்கள் ஓர் இரவில் இரண்டு மணியளவில் பூட்டை உடைத்து உள் நுழைந்தனர். இவர்களைக் கண்ட அம்மையார் மாதர்களைப் பார்த்து எழுந்திருங்கள், திருவிளக்கேற்றி அருட்பெருஞ் சோதி அகவல் பாராயணம் செய்யுங்கள் என்று கூற அவ்வாறே நிகழ்ந்தன. இதைக் கண்ட திருடர்கள் தயங்கி ஓடினர். பின்பு மூன்றாம் நாள் இரவு சுமார் 10 மணியளவில் வஞ்சகர்களால் திடீரென்று கூரையில் தீப்பிடித்துக் கொண்டது. அத் தீனின்றும் ஸ்ரீ அம்மையாரும் மாதர்களும் ஒரு வித தீங்குமின்றி தங்கவேல்பிள்ளை சத்திரத்தில் தங்க நேர்ந்தது. அம்மையார் இவ்விடத்தைவிட்டு வெளியேக எத்தனிக்கும் காலம், பல மாதர்களின் வேண்டுகோளாலும் பல அன்பர்களின் வேண்டுகோளாலும் இணங்கி நிற்கவும், இரெல்வே ஸ்டேஷனுக்கருகில் தவச்சாலை ஏற்பட்டு மாதர்கள் தங்குவதற்குப் பொருத்தமான கட்டிடம் ஒன்று அமைக்கப் பெற்றது. 1946-ம் வருடம் ஜனவரி மாதம் 18-ம் தேதி வெள்ளிக்கிழமை தைப்பூசத் தன்று கிரகப் பிரவேச விழாவும் சிறப்புற நடந்தேறியது. அதுமுதல் அம்மை அங்குத் தவம் செய்து வருகிறார்கள்.

அம்மையாரின் நோக்கங்கள்: சன்மார்க்கத் தவச்சாலையில் மாதர்கள் நிம்மதியாகத் தங்கி இருத்தல் அவர்களுக்கான சன்மார்க்கத் தவ நிலையையும் அருட்பாவின் சாராம்ஸத்தையும். ஞானம் பெறும் அறிவையும் ஒருவாறு புகட்டலாம். என்பது. இக்கொள்கையைக் கொண்டு நிர்வாகக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தி அக் கமிட்டிக்குத் தலைவராகக் காட்டாம்பாக்கம் வரதாரெட்டியார் துணைவியார் திருமதி. ஜெயலக்ஷிமி அம்மையார் அவர்களையும் மற்றும் பல மாதர்களைத் துணைத் தலைவி உதவியாளர்கள் பொருளாளர்களாகவும் தேர்ந்தெடுத்துப் பிரதிதினமும் காலை மாலைகளில் வள்ளலார் வகுத்தபடி அருட்பாவில் உள்ள திருவடிப் புகழ்ச்சி. மற்றும் பாக்களைப் பாராயணம் செய்தலும் மற்றும் ஓய்வு நேரங்களில் ஞான நூல் ஆராய்ச்சிகளும் மற்றும் கைத்தொழில்கள் நூற்பும் நடைபெற்று வருகின்றன. குருவாரம் தோறும் (அதாவது) வியாழன் தோறும் அகவல் பாராயணமும் சன்மார்க்கப் பஜனையும் சொற்பொழிவும் நடைபெற்று வருகின்றன. ஷை நிர்வாகக் கமிட்டியின் தலைவியார் அவர்களால் ஒவ்வோர் ஆண்டிலும் குறிப்பிட்ட மூன்று விழாக்களுக்கும் கூடும் மக்களுக்கு ஷை சாலையில் அன்னம் பாலிப்பு நடத்தவேண்டி $1\frac{1}{2}$. காணி நன்செய் நிலமும் பட்டா செய்து வைக்கப்பெற்றிருக்கிறது.

முடிவு:- இத் தாய் நாட்டில் தாய்மார்களுக்கு என்று நிம்மதியாக ஆண்டவனை வழிபடக் குறிப்பிட்ட ஓர் இடம் இல்லாமல்

# குருகுலத்தார் வழிபாடும் தொண்டும்

(முத்துசாமி)

மாம்பாக்கம் குருகுலத்தார் 4-12-54 சனிக்கிழமையன்று குன்று, ஸ்ரீ சுந்தரராச பெருமாள் ஆலயத்தில் வழிபாடும் தொண்டும் இயற்றினர். ஊர்வலமும், வழிபாடும், பேரவையும் நிகழ்ந்தன.

ஆடவரும், மாதரும், பெருந்திரளாக வந்து திருக்குறள் அட்டைகளைத் தாங்கிக் கொண்டு ஆசிரியர், திரு. ராதாகிருஷ்ண பிள்ளை M.C முதலியோர் தலைமை தாங்கி முன்செல்ல, ஊர்வலமாக வந்து திருக்கோவிலை அடைந்தனர்.

பேரவைக்குச் சென்னை நகராண் கழகக் காங்கிரஸ் குழுத் தலைவர் திரு. ராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினர். திரு. வரதராசன் M. c. திரு. ஏகாம்பரம் M. c. அவர்களும் கலந்துகொண்டு நல்லுரை வழங்கினர்.

தலைவர் திரு. ராதாகிருஷ்ன பிள்ளை அவர்கள், திருவள்ளுவர் வழியில் நடப்பது இக்குருகுலம் என்றும், திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று மட்டும் மொழிந்தார், வீட்டைப்பற்றிக் கூறவில்லையென்று பலர் கூறுவர் என்றும், அவர் கடவுள்வாழ்த்து துறவறப் பகுதி ஆகிய பகுதிகளில் வீட்டைப் பற்றிக் கூறியுள்ளார் என்றும் கூறி, மேலும் பேசுகையில் சமயப் பிரசாரம் இன்னும் அதிகமாகத் தேவையென்றும் கூறினார்.

ஆசிரியர் இளவழகனார் அவர்கள் பேசுகையில் திருக்கோயில்கள் நம் நாட்டில் கற்களால் கட்டி நெடு நாட்கள் நிலைத்திருக்கும்படியாக அமைத்திருப்பதின் நோக்கம் நம் முன்னோர்கள் தாம் மட்டும் பயன் பெறுவதோடு அல்லாமல் பின்வரும் மக்களும் பயனடைய வேண்டும் என்ற எண்ணமே என்றும், அவர்கள் நோக்கம் அறிந்து நடக்காவிடில் நன்றி மறந்தவர்களாவோம் என்றும் 'நன்றி மறவாமை' தமிழர்களின் சிறந்த பண்பு என்றும் கூறிவிட்டு மேலும் பேசுகையில், சிவ வழிபாடு உடையோக்குத் திருமால் வழிபாடும் அங்கமாக உண்டு என்றும், திருமால் திருதிருவுருவம் சிவன் கோவிலில் உண்டு என்றும், நின்ற கோலத்திலும் இருந்த கோலத்திலும் கிடந்த கோலத்திலும் ஆகிய மூன்று நிலையில் அது திருக்கோயில்களில் அமைந்திருக்கின்றது என்றும், சிவ உருவம் நின்ற இருந்தகோலத்தில் உண்டு என்றும் கூறி அவற்றின் உட்கருத்தை விளக்கி, இவையெல்லாம் எல்லார்க்கும் வேண்டும் என்றும் கூறி ஆழ்வார்கள் திருப்பாசுரத்திலிருந்து சில பாடல்கள் மேற்கோட்கள் காட்டி விளக்கினர். நன்றியுரையுடனும் வாழ்த்துடனும் கூட்டம் முடிந்தது.

மறு நாள் ஞாயிற்றுக் கிழமை காலையில் அதே கோவிலில் ஆசிரியர் அவர்கள், மாணிக்கவாசகர் திருக்கழுக்குன்றத்தில் உலகத்தார்க்கு வழங்கிய இறைவன் திருவடியின் நினைவாகச் செய்யப்பட்ட திருவுருவத்திற்குச் சிறப்பாகத் திருமுழுக்கு, அருச்சனை முதலியவைகள் செய்தனர்.

அருச்சனை செய்யுங்கால் அப்பர் சுவாமிகள் பாடிய திருவடித் திருத்தாண்டகம் உருக்கமுடன் ஓதப்பட்டது. வழிபாடு முடிந்ததும் ஆசிரியர் அவர்கள் திருவடி வழிபாட்டைப்பற்றி விளக்கிப் பேசினார். இறுதியில் திருவடித் திருத்தாண்டகத்தில் உள்ள நான்காவது பாடலுக்கு விளக்கமாக உரை வழங்கினர்.

(வரும்)

இருந்து, தற்போது ஆண்டவன் அருளால் அம்மையார் அவர்களின் துணை கொண்டு, உத்தர ஞான சிதம்பரம் என்னும் புண்ணிய பூமியாம் வடலூரில் ஏற்படுத்திய சன்மார்க்கத் தவச்சாலை யாவருக்கும் பயன்படுமாறு எல்லாம் வல்ல அருட் பெருஞ்சோதி ஆண்டவர் அருள் புரிவாராக!

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்

நூலாடைகளுக்கும்

சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

53 கிடங்கு தெரு, சென்னை 1

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசந்திரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்)